# பொதுக்காலம் மூன்றாம் வாரம்
## திருவழிபாடு ஆண்டு - C

**இன்றைய வாசகங்கள்:**

நெகெ 8:2-6,8-10,

1கொரி 12:12-30,

லூக் 1:1-4,14-21

## திருப்பலி முன்னுரை:

அன்புமிக்க சகோதர, சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் அருள்மிகு நாமத்தில் நல் வாழ்த்துக்கள். புத்தொளி வீசிட, புதுமணம் கமழ்ந்திட புதிய நாள் பிறந்தது, இறைவனின் அருளை இறைபலியினில் பெறவே புனித நாள் புலர்ந்தது. இறைவனின் திருக்கூட்டமே இன்று நாம் பொதுக்காலம் 3ம் ஞாயிறை சிறப்பிக்கிறோம்.

இறைவன் ஒருபோதும் நம்மை மறப்பதில்லை. அவர் தம் இறைவாக்கினர் மூலமாகவும், தம் திருமகனும், நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து மூலமாகவும் வாழ்வுதரும் வார்த்தையை நமக்கு வழங்கி நலன்களால் நம்மை நிரப்பிக்கொண்டிருக்கின்றார். நாம் திசை மாறிச் சென்று தீமையின் வலைக்குள் சிக்கிவிடக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். நிறைவானதும், நீதியானதும், புத்துயிர் அளிப்பதும், நம்பத்தக்கதும், ஞானம் நிறைந்ததும், மகிழ்வளிப்பதும், ஒளியமயமானதும், உண்மையானதுமான தமது வார்த்தையை நமக்கு வழங்கி நம்மை வழிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

நம்மீது அளவில்லாக் கரிசனை கொண்டிருக்கும் இறைவன், நாம் ஒற்றுமையின் சமூகமாக வாழ்வதையே விரும்புகின்றார். நாம் ஒரே உள்ளமும், ஒரே மனமும் உள்ளவர்களாக வாழும் போதுதான் இறையரசைக் கட்டியெழுப்பி, இயேசுவின் சாட்சிகளாக வாழமுடியும். எனவே நாம் இனியும் பகைமையுணர்வுகளை வளர்த்துக் கொள்ளாது, ஒன்றுபட்டு உறவின் சமூகமாக வாழ இன்றைய திருப்பலியில், வரம் கேட்டுச் செபிப்போம்.

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

**ஆசீரும் அருளும் நிறைந்த அன்புத் தந்தையே இறைவா!**
உமது பிரதிநிதிகளாக இருக்கும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் மக்களுக்கு ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும்: அவர்களுக்காக இறைவனிடம் பரிந்து பேசுகின்றவாகளாகவும், நல்ல வழிகாட்டிகளாகவும் இருந்து பணியாற்ற வேண்டிய பலத்தையும் உடல் நலத்தையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஒருவர் ஒருவரின் சுமைகளைத் தாங்கிக் கொள்ள சமூக உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!**
எமது சமூகத்திற்காக உம்மிடம் இரந்து வருகின்றோம். இன்றைய நாட்களில் சமூக உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த் தெறிந்து நாம் அனைவரும் ஒரே உள்ளமும், ஒரே மனமும் உடையவர்களாச் செயற்பட்டு இறையரசின் கருவிகளாகவும், சமாதானத்தின் தூதுவர்களாகவும், உமது சாட்சிகளாகவும் செயற்பட வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஞானத்தின் ஊற்றே இறைவா!**
உமது திருப்பெயரை உச்சரித்துக் கொண்டு, பிளவு பட்டு, போட்டி மனப்பான்மையோடும், ஒற்றுமையின்றியும் வாழும் எல்லாக் கத்தோலிக்க, கிறிஸ்தவ சபைகளும் உமது விருப்பத்தையும், சித்தத்தையும் நாம் சரியான விதத்திலே புரிந்துகொண்டு அடுத்தவரின் நலனில் அக்கறைகொண்டு, ஒன்றுபட்டு, பிரிவினைகளைக்களைந்து உமது விருப்பத்தை நிறைவேற்றுகின்ற நன்மனதை எமக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஓய்வு நாளுக்கும் ஆண்டவரான இறைவா,**
இயேசுவிடம் இருந்த இறைப்பற்று, நல்ல பழக்கம் எங்களிலும் இருக்க அருள்தாரும். ஓய்வு நாள்தோறும் உம்மைப் போற்றவும், உமக்காக வாழவும் உம் திருமகன் இயேசுவிடம் இருந்த அதே ஊக்கத்தின் மனநிலையை எங்களுக்கும் தாரும். நீர் தந்த இறைநம்பிக்கை என்னும் கொடைக்காக நன்றி செலுத்துகிறோம். எங்களது துன்ப நேரங்களில் எங்களுக்கு சகிப்புத் தன்மையையும், மன உறுதியையும் பொழிந்தருளவேண்டும் என்றும், எம் இளைய சமுதாயம் தனது வாலிப நாட்களில் நீர் தரும் நலன்களை கண்டுக் கொண்டு அதனை நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ள தூயஆவியானவரின் அருங்கொடைகளை அபரிமிதமாகப் பொழிந்தருளவேண்டும் என்ற இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எங்களை உமது உரிமைச் சொத்தாகத் தேர்ந்து கொண்ட எம் இறைவா!**
எங்கள் குடும்பங்களில் இறைமகனின் வருகையை உணர்ந்திடவும், தெளிவற்று திகைத்து நிற்பவர் தெளிவு பெறவும், கொள்கைப் பிடிப்பின்றி வாழ்பவர் கொள்கைப் பிடிப்புடன் வாழவும், பிறரன்பில் தழைத்திடவும் உமது அருள்வரங்களை நிறைவாய் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**எங்கள் முன்னும் பின்னும் என்னைச் சூழ்ந்திருக்கும் எம் அன்பு இறைவா!**
இந்த நல்ல நாட்களில் பொங்கல் விழாவைக் கொண்டாடி மகிழும் எம் உழைக்கும் மக்களின் வாழ்வில் விவசாயம் பெருகவும், அதன் மூலம் ஏழை எளியோர்கள் பொருளாதரம் பல்கிப்பெறுகிடவும், அவர்தம் பிள்ளைகள் கல்விச்செல்வங்கள் நிறைவாய் பெற்றிடவும், இயேசுவின் வருகையால் மாற்றங்கள் பெற்றிடவும் இறைவா அருள் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**மனிதனாக அவதரித்த மாபரனின் தந்தையே!**
எங்கள் சமூகத்தில் இடம் இல்லாமல் அலைந்து கொண்டிருக்கும் ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோர், மாற்று திறனாளிகள் அனைவரையும் ஆசீர்வதித்து அவர்கள் மறுவாழ்வு பெறவும், எங்கள் ஒவ்வொருடைய உள்ளத்திலும் அவதரித்து அன்பு, அமைதி, சமாதானம் போன்ற புண்ணியங்களை எங்களுக்கு பொழிந்தருள வேண்டுமாய், பிறந்திருக்கின்ற இயேசுபாலன் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை வழங்கும் தந்தையே!**
இன்று இத்திருப்பலியில் பங்குகொள்ளமுடியாமல் நோயுற்றிருப்போர், சிறைகளிலும், வதைமுகாம்களிலும் இருப்போர், அகதிகள் முகாம்களில் இருப்போர், பல்வேறு வேலைத்தளங்களில் பணியாற்றுவோர், பயணம் செய்வோர் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்களும் இன்றைய நாளின் மகிழ்வையும், ஆசீரையும் பெற்று மகிழச் செய்தருள வேண்டுமென்றும், நிலையற்ற இந்த உலகின் செல்வங்களைத் தேடி மன நிம்மதியை இழந்து நிற்கும் மக்கள் அனைவரும், நிலையான செல்வமாகிய உம்மில் நிம்மதி காண அருள்புரியவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**தாயும் தந்தையுமான இறைவா,**
உடல், உள நோயினால் வேதனையுறும் அனைவரையும் நீர் இரக்கத்துடன் கண்நோக்கி: அவர்களின் வேதனையைத் தணித்து, நிறைவான உடல், உள நலத்தை அளித்துக் காத்திட வேண்டுமென்றும், இன்று எமது சமூகத்திலே வீணான விவாதங்களாலும், குழப்பங்களாலும், தவறான போதனைகளாலும், பிடிவாதத்தாலும், உறவை முறித்து, விசுவாசத்தை மறந்து பாதை மாறிச் செல்லும் அனைவர்மீதும் மனமிரங்கி உமது வழியில் செல்ல அவர்களை வழிப்படுத்தியருள வேண்டுமென்றும், எமது இளைஞர்களை நிறைவாக ஆசீர்வதியும். அவர்களது இளமைப் பருவத்தின் பாவங்களையும், குற்றங்களையும் நினையாது உமது இரக்கத்தையும், உமது பேரன்பையும் அவர்கள் மேல் பொழிந்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.